Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

வருகையின் தூதன்

Vol. 69 நான் என் பகைஞரைச் சங்கரிக்கும்படியாக, என் சத்துருக்களின் பிடரியை எனக்கு ஒப்புக்கொடுத்தீர். சங்.18:40 ஏப்ரல் 2023 No.4

கிறிஸ்துவின் சிலுவை

The cross of Christ

J.C. Ryle

"நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையும் குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக...." கலாத்தி.6:14

"நான் அடைந்ததும் பிரதானமாய் உங்களுக்கு ஒப்புவித்ததும் என்னவென்றால் கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்தார்." 1 கொரி.15:3

"இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்". 1கொரி.2:2

பவுல் கூறியிருப்பவை யாவும் சரி என்று நாம் உறுதி பண்ணலாம். சிலுவையும், பாவிகளுக்காகக் கிறிஸ்து பாவ நிவாரண பலியாக மரித்ததும் வேதபுத்தகத்தின் மையக் கருத்தாகும். ஆதியாகமத்திலேயே இக்கருத்து ஆரம்பமாகிறதைக் காணலாம். ஸ்திரீயின் வித்து சர்ப்பத்தின் தலையை நசுக்குவது என்பது கிறிஸ்து சிலுவையில் அறையப்படுவதைக் குறித்த தீர்க்கதரிசனமாம்.

மறைக்கப்பட்டிருந்தாலும் இச்சத்தியம் மோசேயின் கட்டளை மற்றும் யூதர்களின் சரித்திரம் ஆகிய வற்றின் வழியாக தெளிவாகப் புலப்படுகிறது. இரத்தம் சிந்துதல், அனுதின பலி, பஸ்கா ஆட்டுக்குட்டி, கூடாரத்திலும் தேவாலயத்திலும் தொடர்ந்து இரத்தம் சிந்துதல் போன்ற இவையெல்லாம் கிறிஸ்து சிலுவையில் அறையப்படுவதற்கு அடையாளமாயிருக்கின்றன.

வேதபுத்தகத்தின் இறுதிப் புத்தகமாகிய வெளிப்படுத்தின விசேஷமும் இந்த சத்தியத்தை பரலோக தரிசனத்தின் மூலம் வெளிப்படுத்துகிறது. "அப்பொழுது, இதோ அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஒரு ஆட்டுக்குட்டி, சிங்காசனத்திற்கும், நான்கு ஜீவன்களுக்கும் மத்தியிலே நிற்கக் கண்டேன்" வெளி.5:6. பரலோக மகிமையின் மத்தியிலும் கிறிஸ்து சிலுவையிலறையப்படுவது காட்சியளிக்கிறது.

பவுல் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையும் குறித்து மேன்மை பாராட்ட விரும்பவில்லை. அவரைப் போல வாழப் பிரயாசப்படுங்கள். உங்கள் ஆத்துமாவுக்கு முன்பாக சிலுவையிலறையப் பட்ட இயேசுவை வைத்திருங்கள். தொடர்ந்து, கிறிஸ்துவின் சிலுவையின் மேலேயே வாழ்வது நம் அனைவருக்கும் சிறப்பான அனுபவம் என்று நான் நம்புகிறேன்.

புதிய ஏற்பாட்டில் நான்கு முறை சிலுவையில் அறையப்படுதல் விவரிக்கப் பட்டுள்ளது. சில சம்பவங்கள் மட்டுமே நான்கு சுவிசேஷங்களிலும் அதினதின் ஆக்கியோன்களால் எழுதப்பட்டுள்ளன. பொதுவாக ஆண்டவராகிய இயேசுவின் வாழ்வில் நடந்த ஒரு சம்பவத்தை மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகியோர் எழுதி விட்டால் யோவான் அதனை எழுதுவதில்லை. ஆனால் நான்கு சுவிசேஷங்களிலும் மிகத் தெளிவாகவும் முழுமையாகவும் சொல்லப்படுவது சிலுவை சம்பவம் ஒன்று மட்டுமே. ஏனெனில் இது மிக முக்கியமான சம்பவம்.

சிலுவையில் நான் ஞானம், வல்லமை, சமாதானம், நம்பிக்கை, சந்தோஷம், மனமகிழ்ச்சி, ஆறுதல், ஆற்றுதல் போன்ற அனைத்தையும் காண்கிறேன். எனது உள்ளக் கண்களில் சிலுவையை எவ்வளவாக வைத்திருக் கிறேனோ, அவ்வளவாக அதனை முழுமையாகப் பெற்றுக் கொள்கிறேன். என் சிந்தனையில் எவ்வளவு அதிகமாக சிலுவையினடியில் வாசம் பண்ணு கிறேனோ அவ்வளவு அதிகமாக கற்றுக் கொள்ள முடியும் என்ற திருப்தி எனக்கு ஏற்படுகிறது.

பிதாவின் அன்பு

பாவம் நிறைந்த உலகத்துக்கு நேராக பிதாவாகிய தேவன் காண்பிக்கும் அன்பின் நீளம் அகலம் ஆகியவற்றை நான் அறியக்கூடுமா? அந்த அன்பு வெளிப்படுத்தப்படுவதை எங்கு காணலாம்? அவர் படைத்த மகிமையான சூரியன் ஒவ்வொரு நாளும் நன்றி கெட்டதும் தீமை நிறைந்ததுமான மக்கள் மீது பிரகாசிப்பதை ஒவ்வொரு நாளும் நான் காண்கிறேன். விதைக்கிற காலம், அறுக்கிற காலம் என பருவ காலங்கள் மாறி மாறி வருகின்றனவே. ஆயினும் அவரது அன்பின் உறுதியான நிரூபணத்தை எல்லாவற்றிற்கும் மேலாகச் சிலுவையில் பார்க்கிறேன்.

பிதாவின் அன்பிற்கான காரணத்தை நான் காணவில்லை. ஆனால் அதன் விளைவைக் காண்கிறேன். "தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்" யோவா.3:16. நாம் இப்போது இருக்கிறபடி தரம் தாழ்ந்த கறைபடிந்த சிருஷ்டிகள். அவரோ மிகவும் உயர்ந்த வரும் பரிசுத்தம் நிறைந்தவருமாயிருக்கிறார். எனினும் அவரது சிலுவை நம்மை சிந்திக்க வைக்கிறது.

பாவத்தின் பாவத்தன்மை

தேவனுடைய பார்வையில் பாவம் கொடியதும் அருவருக்கப்படத் தக்கதுமாயிருக்கிறது. பாவம் நோவா காலத்தில் மக்களை ஜலப்பிரளயத்தில் அமிழ்த்தியது. சோதோம் கொமோரா மக்களைப் பாவம் அக்கினிக்கு இரையாக்கியது. ஆயினும் கிறிஸ்துவின் சிலுவை நிவாரணமளிக்கக் கூடியது.

பாவம் இருள் நிறைந்து கருமையாயிருக்கிறது. தேவ குமாரனாகிய ஆண்டவராகிய இயேசுவின் இரத்தம் ஒன்றே அதனைக் கழுக முடியும். பாவம் நம்மை தேவனிட மிருந்து பிரித்து விடும். பின்பு பரலோக தூதர்கள் அனைவரும் கூடினாலும் நமக்கும் பரிசுத்த தேவனுக்குமிடையில் சமாதானம் உண்டு பண்ண முடியாது. நாம் சிலுவையை நோக்கிப் பார்ப்போமானால் பாவத்தை அற்பமாக எண்ண மாட்டோம்.

இரட்சிப்பின் பூரணம்

பாவிகளுக்கு தேவன் அளித்திருக்கும் இரட்சிப்பின் பூரணமும் அதன் முடிவுற்ற நிலையும் அறிய முடியாதவை. எங்கு இதனைத் தெளிவாகக் காண

(3-ம் பக்கம் பார்க்க)

அறிவிப்பு

நீங்கள் கடிதம், காணிக்கை அனுப்பும் ஒவ்வொரு தடவையும் உங்கள் **பத்திரிகை பதிவு எண், தொலைபேசி எண்** இரண்டையும் கட்டாயம் எழுதுங்கள்.

கடிதம், காணிக்கை, கொரியர்அனுப்ப வேண்டிய முகவரி :

வருகையின் தூதன்
நியுபோர்ட் தெரு,
நாகர்கோவில் – 629 001.

VARUKAYIN THOOTHAN
Newport Street,
Nagercoil - 629 001.
Mobile : 9543221008

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

சிலுவையின் வல்லமை

The power of the cross

Dave Butts

சாத்தான் மனிதனை பாவத்தாலும் மரணத்தாலும் அடிமைப்படுத்தியிருப்பதை மனித வரலாற்றில் காண்கிறோம். தேவ கட்டளைப்படி பாவம் செய்கிற ஆத்துமா சாகும். சாத்தான் கொண்டு வரும் மரண பயம் அவனை இன்னும் அதிக அடிமைத்தனத்துக்குள் ஆக்குகிறது. எனவேதான் இந்நிலையில் கிறிஸ்து இப்போராட்டத்தில் இறங்க வேண்டிய தாயிற்று. மனிதன் தன்னைத் தானே இரட்சிக்க முடியாது. எனவே தான் சிலுவை நாதர் சிலுவை சுமக்க வந்தார்.

அந்தச் சிலுவை மீது மனிதனுக்காகக் கிறிஸ்து போர் செய்து வெற்றி பெற்றார். குற்றமற்ற தேவ ஆட்டுக்குட்டி, கொல்லப்பட்டு கிரயம் செலுத்தினார். அவர் தாமாகவே முன்வந்து, நம்மை நமது பாவங்களோடும் அதற்குரிய தண்டனையோடும் ஏற்றுக் கொண்டார். ஒவ்வொருவருக் காகவும் அவர் மரித்து தண்டனைக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டார். இயேசுவைப் பின்பற்றுகிறவர்கள் பாவத்திலிருந்து விடுதலை பெற்று, பாதாளத்திலிருந்து தப்புவிக்கப்பட்டு ஜீவனைப் பெறுகிறார்கள். சிலுவை, வெற்றிக்கு அடையாள மாக நீண்ட காலமாக நிலை நிற்கிறது.

இதைப் புரிந்து கொள்ளுவதால் சிலுவை சபைக்கும் எத்தனை முக்கியமானது என அறியலாம். சிலுவை நமது விசுவாசத்தின் கருப்பொருள். "சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக் கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக் கிறது" 1 கொ.1:18. சிலுவை தேவனுடைய வல்லமை, தமது வல்லமையை விளங்கப்பண்ண அவர் சிலுவையைத் தெரிந்து கொண்டார். எனவே 1 கொரி.2:5-ல் "என் பேச்சும், என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயி ராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்பட்டதா யிருந்தது" என்று எழுதுகிறார். சிலுவை தேவனுடைய வல்லமை. நமது விசுவாசம் தேவ வல்லமையாகிய சிலுவையைச் சார்ந்திருக்க வேண்டும். ஆனால் இன்று நமது விசுவாசம் எங்கு வேரூன்றியிருக்கிறது?

அப்போஸ்தலனாகிய பவுல் தாம் பெலவீனத்தோடும், பயத்தோடும், அதிக நடுக்கத்தோடும் மேலும் அதிக ஞானம் நிறைந்த வார்த்தைகளின்றியும் பிரசங்கித்ததாகக் குறிப் பிடுகிறார். ஏனெனில் கொரிந்தியரின் விசுவாசம் தமது மேலேயோ, வேறெந்த மனிதர் மேலேயோ வைக்கப்படாமல் சிலுவையின் மூலம் வரும் தேவ வல்லமை மேலேயே வைக்கப்பட வேண்டும் என்பதே அவரது நோக்கம். சபை இந்த வார்த்தைகளைக் கேட்டு அதன்படி நடக்க வேண்டும். அனேகர் இன்று தங்கள் விசுவாசத்தை மனிதர் மேலே ஊன்றியிருப்பது போல் நடந்து கொள்கிறார்கள். போதகரை விரும்பினால் சபையை விரும்புகிறார்கள், அவரை விரும்பாவிடில் சபையையும் விரும்புவதில்லை. சிலுவையின் மேல் வைக்கப் பட வேண்டிய விசுவாசம் மனிதர் மேல் வேரூன்றி விட்டது.

செய்தியும் அதற்குரிய வழியும்

நமது விசுவாசம் சிலுவையில் அஸ்திபாரம் கொள்வது மட்டுமல்ல, நமது செய்தியும் சிலுவையாகவே இருக்க வேண்டும் என்பதை சபை புரிந்து கொள்ள வேண்டும். தேவன் தாமே அதற்கு உதவி செய்வாராக. இழந்து போனதும், மரித்துக் கொண்டிருப்பதுமான சபைக்கு இதுவே செய்தி. வேறு எந்த நிவாரணமும் உலகத்திற்கு இல்லை. ஏனெனில் சிலுவை மூலமாகவே தேவ வல்லமை உலகுக்கு வெளிப்படுத்தப் பட்டது. சபை உலகுக்கு சிலுவையின் செய்தியை வெளிப் படுத்த வேண்டும்.

இன்னொருபடி மேலே சென்று சிலுவையைக் குறித்த நமது புரிந்து கொள்ளுதலை சபையிலிருந்து தனி நபருக்கு வருவோம். நாம் தனி நபராக சிலுவை நமது இரட்சிப்பின் வழி

2023-ம் ஆண்டு பத்திரிக்கை அனுப்ப

1. எல்லா ஊழியங்களைப் போல **மாதந்தோறும்** வருகையின் தூதன் பத்திரிக்கை பணியை தாங்குங்கள்.
2. மாதந்தோறும் தபாலில்/வங்கியில் அனுப்ப இயலாதவர்கள் வருடத்திற்கு ஒரு முறை குறைந்தபட்சம் **ரூபாய் 500** அனுப்புங்கள்.
3. கர்த்தர் உங்களை ஏவுகிறபடி சிறப்பு காணிக்கைகள் அனுப்புங்கள்.

என அறிவோம். சிலுவையின் செய்தியைக் குறித்து பவுல் "...தேவ ஞானத்துக்கேற்றபடி உலகமானது சுயஞானத்தினாலே தேவனை அறியாதிருக்கையில் பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்க தேவனுக்குப் பிரியமாயிற்று" (1 கொரி.1:21) என்று எழுதுகிறார். சிலுவையின் செய்தியை விசுவாசிக்கிறவர்களுக்கு நித்திய ஜீவன் உண்டு. ஏனெனில் சிலுவையில் நமது பாவங்கள் மரித்துப் போயின. கிறிஸ்துவின் நபரத்துவத்தில் அவை மரித்துப் போயின. பாவமும் மரணமும் இனி நம்மை மேற்கொள்ளுவதில்லை. சிலுவையால்தான் நாம் உயிர் வாழ்கிறோம் அதுவே இரட்சிப்பின் வழி. அனேகர் இன்று வேறு வழிகளில் முயற்சிக் கிறார்கள், அது பேதமை. வேத புத்தகம் சிலுவையைத்தான் நமது வழியாகக் காண்பிக்கிறது.

கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்படுதல்

கிறிஸ்தவன் சிலுவையை நேசித்து, அதனைத் தனக்கு சொந்தமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். கிறிஸ்துவின் சிலுவை நமது சிலுவையாக வேண்டும். "....ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக் கடவன்" மத்.16:24. அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் சிலுவையுண்டு. நாம் அனைவரும் கிறிஸ்து அறையப்பட்ட சிலுவையை சுமக்கி றோம். எனவேதான் பவுல்: 'கிறிஸ்துவுடனே கூட சிலுவையில் அறையப்பட்டேன்' (கலா.2:20) என்கிறார்.

சபை என்பது சிலுவையிலறையப்பட்ட மக்களின் கூட்டம். நாம் எப்படி கிறிஸ்துவோடு சிலுவையிலறையப் பட்டோம் என்று புரிந்து கொள்ளாவிட்டால் கிறிஸ்தவ வாழ்வுக்குரிய திறவுகோலை தவற விட்டு விட்டோம்.

பவுலின் விளக்கத்தைப் பார்ப்போம்:- ரோமர். 6:3-11 வசனங்களைப் படிப்போம். நாம் கிறிஸ்துவோடு மரித்ததுண் டானால் ஏன் அப்படி மரிக்காதது போல் நடிக்கிறோம்? ஏன் இந்த உலக வாழ்வோடு ஒட்டிக் கொள்கிறோம்? இவ்வுலகிற் காகவும் அதன் காரியங்களுக்காகவும் கவலைப்பட்டுக் கலங்குகி றோம்? நாம் இவ்வுலகத்துக்கு உரியவர்களல்ல. நமது குடியிருப்பு இன்னொரு இடத்திலுள்ளது. சரீர மரணம் நம் வாழ்வை முடிப்பதில்லை. நாம் ஏற்கெனவே மரித்து விட்டால் மரணம் நமக்கு பயத்தைத் தராதே. நாம் கிறிஸ்துவில் பிழைத்திருந்தால் நித்தியமாகப் பிழைத்திருப்போம். அது மிக மகிமையான வாழ்வு! நாம் ஓடும் ஓட்டம் நமது வல்லமையால் ஓடப்படுவது அல்ல, சிலுவையின் வல்லமையால் ஓடும் ஓட்டமாகும். கிறிஸ்துவின் சிலுவை நமது சிலுவையாகட்டும்.

"கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும் பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல கிறிஸ்துவே என்னில் பிழைத்திருக்கிறார்..." கலா.2:20

ஆண்டவராகிய இயேசுவே, உமது வாழ்வை முழுவது மாகவும் முழுமையாகவும் என்னில் நான் அனுபவிக்க உதவி செய்வீராக.

அறிவிப்புகள்

வங்கி வழியாக காணிக்கை அனுப்புவோர்

உடனே எங்களுக்கு SMS or Whatsapp அனுப்புங்கள்

Mobile : **95432 21008** Whatsapp : **9489740295**

e-mail:varukayinthoothan@hotmail.com

பத்திரிகை பணி

A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **2131010118439**
Punjab National Bank, Nagercoil -1. IFSC Code : **PUNB0213120**

வருகையின் தூதன் உபவாச ஊழியம்

A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA0000063**

முன்னேற்றப்பணி

A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **61822200136904**
Canara Bank, Ngl-1 IFSC Code : **CNRB0001110**

(1-ம் பக்க தொடர்ச்சி)

முடியும்? தேவனுடைய இரக்கத்தைக் குறித்து வேதபுத்தகம் கூறுவதென்ன? தேவன் அன்பின் தேவன் என்ற பொதுவான சத்தியத்தை நான் சார்ந்திருக்க முடியுமா? அவரது சிலுவையை மட்டும் நோக்கிப் பார்ப்பேன். அங்கு பெற்றுக் கொள்ளும் நிரூபணம் வேறு எங்குமில்லை. சபிக்கப்பட்ட சிலுவையில் மரித்துக் கொண்டிருக்கும் காட்சியைப் போல புண்பட்ட மனச்சாட்சிக்கு தைலமும் குழம்பிய மனதுக்கு அமைதியுமில்லை.

தீர்க்க முடியாத எனது அனைத்து கடன்களையும் முழுமையாக செலுத்தி முடிப்பதை சிலுவையில் காண்கிறேன். நான் கட்டளையை மீறினபடியால் வந்த சாபத்தை எனக்குப் பதிலாக ஏற்று பாடுபட்டவரை சிலுவையில் காண்கிறேன். எனக்காக கடைசிக் காசு வரை அவர் செலுத்தி விட்டார். மன்னிக்கப்பட நான் தகுதியற்றவன். நான் இரட்சிக்கப்பட தகுதியற்றவன் என்று என் சொந்த இருதயமே என்னிடம் கூறுகிறது. இவையெல்லாம் என் அவிசுவாசத்தின் மடமை. எனக்குரிய பதில் கல்வாரி சிலுவையில் சிந்தப்பட்ட உதிரத்தில் இருக்கிறது. சிலுவையை நான் நோக்கிப் பார்க்கும் போது மிகப் பெரிய பாவிக்கும் பரலோகம் செல்ல ஒரு பாதையிருக்கிறது என்ற உறுதியான உணர்வு எனக்கு ஏற்படுகிறது.

தூய வாழ்வுக்கான தூண்டுதல்

நான் பரிசுத்தமாக வாழ்கிறேன் என்பதற்கு உறுதியான சான்றுகள் உண்டா? பத்துக் கற்பனைகளுக்கும் நான் கீழ்ப்படிந்து நடந்தால் போதுமா? கிருபை எவைகளைச் செய்யக் கூடும் என்பதற்குரிய எடுத்துக்காட்டுகளை வேதபுத்தகத்திலிருந்து படிக்கலாமா? பரலோகம் என்னும் பரிசினை அல்லது நரகம் என்னும் தண்டனையைக் குறித்து தியானிப்பதா? இதைவிடக் கூடுதலான தூண்டுதல்கள் ஏதேனும் உண்டா? ஆம் நான் கிறிஸ்துவின் சிலுவையை நோக்குவேன்.

அங்கு கிறிஸ்துவின் அன்பு என்னை நெருக்கி ஏவி, நான் எனக்காக அல்ல, அவருக்காக வாழச் செய்யும் அனுபவத்தை அடைவேன். நான் எனக்குரியவனல்ல, அவரால் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டவன் என்பதைக் காண்பேன். எனது சரீரமும் ஆத்துமாவும் அவருக்குரியவைகளானதால் அவைகளால் அவருக்கே மகிமை செலுத்த நான் கடமைப்பட்டவன். சிலுவையில் அவர் என்னை என் பாவங்களிலிருந்து மீட்டுக் கொள்வதற்காக மட்டுமல்ல, என்னைப் பரிசுத்தப்படுத்தி, நற்கிரியைகள் செய்ய விசேஷித்த ஜனமாகவும் தெரிந்து கொண்டார். தமது சொந்த சரீரத்தில் சிலுவையை ஏற்றுக் கொண்டபடியால் நான் பாவத்துக்குச் செத்து நீதிக்குப் பிழைக்கச் செய்தார். கிறிஸ்துவின் சிலுவைக்காட்சி, நம்மைத் தூய்மைப்படுத்துகிறது. அது நமக்காக உலகத்தை சிலுவையில் அறைவதோடு, நம்மை உலகுக்கு சிலுவையிலறைகிறது. **இயேசு நமக்காகச் சிலுவையிலறையப்பட்டார் என்பதை எண்ணிப் பார்த்தால் எப்படி பாவத்தை நேசிக்க முடியும்?**

திருப்திக்கான காரணம்

வாழ்வின் கவலைகள் பாரங்கள் மத்தியில் திருப்தியாகவும் சந்தோஷமாகவும் இருக்க கற்றுக் கொள்வதெப்படி? மிக எளிதாக இந்த மன நிலையை நான் பெற்றுக் கொள்வது எப்படி? தேவனுடைய சர்வ வல்லமை, அவரது ஞானம், அவரது தாராளம், அவரது அன்பு இவற்றில் எதை நான் எதிர்பார்க்க வேண்டும்? இவையெல்லாம் நல்லதென்றாலும் இவற்றிற்கு மேலாக அவரது சிலுவையை நோக்குவது மேலானது.

தமது சொந்தக் குமாரனென்றும், ஏக சுதனென்றும் பாராமல், எனக்காக மரிக்க, அவரை ஒப்புக் கொடுத்தவர் எனக்குத் தேவையான அனைத்தையும் கொடுப்பது அதிக நிச்சயமாமே. எனது ஆத்துமாவுக்காக இத்தனை வேதனைகளை சகித்தவர் எனக்கு நன்மையான எதையும் தராமலிருப்பதில்லை. எனக்காக மிகப் பெரிய காரியங்களைச் செய்தவர் மிகச் சிறிய காரியங்களைச் செய்யாமல் இருப்பாரோ? பரலோகத்தில் எனக்கு ஓர் இடத்தைத் தரும் படியாய் தமது இரத்தத்தைச் சிந்தினவர், உலக யாத்திரை முழுவதும் எனக்கு நன்மையானவைகளைத் தருவது நிச்சயம். சிலுவையினடியில் பெற்றுக் கொள்வது போன்ற திருப்தியை எந்தப் பள்ளியிலும் கற்றுக் கொள்ள முடியாது.

எனவே கிறிஸ்தவர்களாகிய நாம் அனைவருமே சிலுவையை மகிமைப்படுத்த வேண்டும். சிலுவையைக் குறித்துக் கேள்விப்பட்ட எவருமே அசைக்கப்படாமலிருக்க முடியாது.

மரிப்பதற்காகப் பிறந்த இயேசு

Jesus - Born to die

Adolph Saphir (1831-1891)

தெய்வீகத்தின் மிகப்பெரிய இரகசியம் என்னவெனில் தேவன் பூமிக்கு இறங்கி வந்தார், தேவனே தமது ஜனத்தை சந்தித்தார், தேவ குமாரன் மனிதனானார் என்பதாகும்.

இந்த மிகப்பெரிய இரகசியத்தை நாம் ஆராதிக்கும்போது தேவன் மனிதனானது நிச்சயமாக சிலுவையில் அறையப்படுவதற்கே என நினைவுகூர வேண்டும். முன்னணையின் இரகசியம் சிலுவையின் இரகசியத்தை உள்ளடக்கியது.

தேவன் மனிதனாக அவதரித்தது மக்களை சந்திக்க மட்டுமல்ல, மனித குலத்தை மீட்பதற்காகவும் என்பது மறுக்க முடியாத சத்தியம். பாவிகள் மனந்திரும்ப வேண்டும் என்பது பிதாவின் திட்டம். தேவ குமாரன் 'இதோ வருகிறேன்' என்று சொன்ன போது அது பெத்லகேமில் அவரது பிறப்பைச் சுட்டிக் காட்டியது. ஆனால் 'உமது சித்தத்தின் படி ஆகக்கடவது' என்று கூறிய போது அவர் தன்னைப் பாவ நிவாரண பலியாக்கிய சாபமாகிய மரத்தின் மீது அவர் அநீதியுள்ள மக்களுக்காக நீதியானதைக் காண்பித்தார் (எபி.10:9) அவர் தாமாகவே சந்தோஷமாக வந்தார். அவர் கன்னி மரியாள் மூலமாகப் பிறந்தது, எபி.10:10ன்படி 'இயேசு கிறிஸ்துவினுடைய சரீரம் ஒரே தரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்'. மரிப்பதற்காகவே அவர் பிறந்தார். பாவநிவாரண பலியாகத் தம்மை ஒப்புக் கொடுக்க அவர் இவ்வுலகில் வந்தார். தம்மைப் பலியாக ஒப்படைக்க நமது தன்மையைத் தரித்துக் கொண்டார்.

அவரது மரணத்தை நோக்குவோம்

அவரது வாழ்வில் தொடர்ந்து மரணத்தை எதிர்நோக்கியதை நாம் காணலாம். மற்ற மனிதரை விட இவர் மிகவும் வேறுபட்டவர். அவர்கள் தங்கள் வாழ்நாளில் நிறைவேற்றப் போகும் சாதனைகளைக் குறித்துப் பேசிக் கொண்டே இருப்பார்கள். அவர்களது சக்தியை தங்கள் திறமை எல்லாவற்றையும் அவைகளுக்கே செலவிடுவார்கள். ஆனால் இயேசு தமது மரணத்தால் எதை நிறைவேற்றப் போகிறார் என்பதையே கூறினார். மற்றவர்கள் மரணத்தை தங்கள் பணியின் முடிவு நிலை என்று கூறிய வேளை இயேசுவோ, அதனைத் தமது மிகப் பெரிய மகிமையான பணி என்றும் தனது நித்திய தாக்கத்துக்கான ஆதாரமும் ஆரம்பமுமென்று கூறினார்.

யோவான் சுவிசேஷம் அடிக்கடியாகவும் அழுத்தமாகவும் இயேசுவின் மரணத்தை நமது கண்களுக்கு முன் பாகக் கொண்டு வருகிறது. முதல் அதிகாரத்திலேயே அவர் பாவத்தைச் சுமந்து தீர்க்கும் தேவாட்டுக் குட்டியாகச் சுட்டிக் காண்பிக்கப்படுகிறார். முதலாவது அவர் எருசலேமுக்கு வந்த போது தேவாலயத்தை இடித்துக் கட்டுவதாக தமது மரணத்தைக் குறித்துக் கூறியிருக்கிறார். நிக்கோதேமுவிடம் பேசும் போது சிலுவையிலறையப்படும் இரகசியம், தேவ குமாரன் உயர்த்தப்படுவது, தேவனுடைய நேச குமாரனின் பலி ஆகியவற்றை எடுத்துரைக்கிறார். பரத்திலிருந்து வரும் ஜீவ அப்பத்தைக் குறித்துப் பேசும் போது அவர் தமது போதனைகள் அல்லது எடுத்துக்காட்டுகளை குறிப்பிடாமல், "நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே" (யோவா. 6:51) என்று கூறியிருக்கிறார். அவர் தம்மை நல்ல மேய்ப்பன் (10:11) என்று கூறுவது மந்தையைக் கண்காணிப் பதாலோ, புல்லுள்ள இடங்களில் மேய்ப்பதாலோ, அமர்ந்த தண்ணீர்களண்டை நடத்துவதாலோ அல்ல, பிதா கட்டளையிட்டது போல ஆடுகளுக்காக ஜீவனைக் கொடுக்க வந்தார். கிரேக்கர்கள்

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்க தொடர்ச்சி)
பண்டிகைக்கு வந்து விட்டு இயேசுவைக் காண விரும்பிய போது ஆவியில் தமது எதிர்கால சபையை தரிசித்து மரணத்தைக் குறித்து, 'கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும் என்றார்'.

அவரது ஊழிய ஆரம்ப காலத்திலிருந்தே சிலுவை அவரது இருதயக் கண்களுக்கு முன்னாலிருந்தது. தமது சீடர்களிடம் மிகப் பெரிய இரட்சிப்பின் இரகசியத்தை இயேசுவின் சிலுவை மரணத்தின் மூலமாகவே பெற முடியும் எனறு தூய ஆவியால் பேசினார். இவரே தேவ குமாரன், நமது மேசியா, நமக்கு எல்லாவற்றிற்கும் எல்லாமானவர். உலகில் நமது நம்பிக்கை, பரலோகில் நமது சந்தோஷம்.

அன்பு நம்பிக்கை ஆகியவற்றின் ஆதாரம்

இயேசுகிறிஸ்து சிலுவையிலறையப்பட்டார்! நமது விசுவாசத்தின் அஸ்தி பாரமும், நமது அன்பின் ஆதாரமும் நம்பிக்கையின் நீரூற்று மானவர்.

நாம் பாவியைப் பார்த்து "இதோ தேவ ஆட்டுக்குட்டி" *(யோவா.1:20)* என்கிறோம். உங்கள் தற்கால நிலை எப்படியிருந்தாலும், தற்கால வாழ்வு எப்படியிருப்பினும் தரித்து நில்லுங்கள். தேவனுடைய இரட்சிப்பைப் பாருங்கள். அது பரத்திலிருந்து இறங்கி வருகிறது. அது பிதாவின் ஈவு. உங்கள் இருதயத்திலோ சிந்தையிலோ அதன் வேர் இல்லை. அது தெய்வீக இரக்கத்தின் நிறைவிலிருந்து இறங்கி வருகிறது. அது குருசிலறையப்பட்ட இயேசுவே. "**...என்னை நோக்கி பாருங்கள் அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்**" *(ஏசா.45:22)*

பரலோக எருசலேமுக்கு நேராகப் பயணிக்கும் ஒவ்வொரு விசுவாசியின் முன்னேற்ற நிலையிலும், ஏழையாகவும் தேவையுள்ளவர்களாயுமிருங்கள், கிறிஸ்துவே எல்லாவற்றிற்கும் எல்லாமானவர்; தேவன் அவரை நமக்காக பரலோகில் நீதிமானாகவும், நமது இருதயங்களை தூய்மைப்படுத்துகிறவராகவும் இவ்வுலகில் வாழச் செய்தார்.

இங்குதான் அன்பின் ஆதாரம் இருக்கிறது. தேவன் நம்மேல் பொழிந்தருளும் நன்மைகளை உணருகிறோம். நன்றியுடன் அவரது தாராளமான கரத்தையும் ஒரு போதும் தளராமல் ஆசீர்வதித்து வழிநடத்துகிற தந்தை போன்ற இருதயத்தையும் அவரது முடிவற்ற நற்குணம், பரிசுத்தம், இனிய விருப்பம் ஆகியவற்றை சிந்தித்து பக்திப் பரவசம் அடைகிறோம். ஆனால் அவரது கொழுந்து விட்டு எரியும் அன்பை அறிந்து கொள்ள சிலுவையிலறையப்பட்ட இரட்சகரை நோக்க வேண்டும். அப்போது தான் தூய ஆவியானவர் தேவ அன்பை நமது இருதயங்களில் ஊற்றுவார்.

இங்குதான் நமது நம்பிக்கை இருக்கிறது. கிறிஸ்தவனை வேறெதுவும் அவனது சோதனைகள், துன்பங்கள், பலவீனங்கள் போன்றவற்றில் நிலை நிறுத்த முடியாது. "தமது சொந்தக் குமாரன் என்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக் கொடுத்தவர், அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பது எப்படி?" *(ரோமர். 8:32)* எந்த விவாதமும் நமது துக்கத்திலும் குழப்பத்திலும் நம்மை ஆறுதல் படுத்த முடிவதில்லை. "கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்து மிருக்கிறவர்". ரோமர்:8:34 இதுவே நமது ஒரே அடைக்கலமும் பலத்த துருகமுமாய் நமது சோதனைகளிலும் சந்தேகங்களிலும் காணப்படுகிறது. இரக்கமும் உருக்கமுமான பிரதான ஆசாரியரது தன்மையை நாம் உணரும் போது பாடுகளின் வேளைகளில் பரலோக இனிமையை நாம் அனுபவிக்கிறோம். மேலும் ஆவியானவர் நமது பாடுகளிலெல்லாம் அவரும் பாடுபடுகிறார் என்பதையும் அது போல அவரது ஆசீர்வாதம், மகிமை ஆகிய வற்றிலும் நாம் பங்காளிகள் என்பதை நாம் உணரும் போது பாடுகள் மறைகின்றன. நமது நம்பிக்கை நமக்காக சிலுவையில் அறையப்பட்ட இயேசுவில் இருக்கிறது.

சிலுவை வழியாக வெளிச்சத்தில் பிரவேசிக்கிறோம். இது தேவனுடைய வழி. கிறிஸ்து இப்பாடுகள் வழியாகக் கடந்து சென்று மகிமையில் பிரவேசிக்க வில்லையா? அனேக பாடுகள் வழியாகவே சபை தேவ ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும். மனிதரால் ஒதுக்கப்பட்டு, வெறுக்கப்பட்டு சபை பெலனற்று தனது மகிமை ஐசுவரியம் யாவற்றையும் இழந்தாலும் அது ஆண்டவரைப் பின்பற்றுகிறது. ஏனெனில் அவர் தம்மைத் தாழ்த்தி சிலுவையின் மரண பரியந்தம் கீழ்ப்படிந்தார். சகல வல்லமையும் மகிமையும் தேவனாகிய பிதாவுக்கே உண்டாவதாக. ஆமென்.

சிலுவை சுமத்தல்

Cross - Bearing

Arthur W. Pink (1886-1952)

"அப்பொழுது இயேசு தம் முடைய சீஷர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்". *(மத்.16 :24)*

சிலுவை சுமக்க விருப்பம் வேண்டும். அவன் தனது சிலுவையை எடுக்க வேண்டும். லூக்.14:27-ல் கிறிஸ்து இவ்வாறு கூறுகிறார்: "தன் சிலுவையைச் சுமந்து கொண்டு எனக்குப் பின் செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்க மாட்டான்". எனவே இது விருப்பத் தேர்வு அல்ல. அது நம்மை குறிப்பிட்ட மார்க்கச் சட்டங்களுக்கு ஒப்புக் கொடுப்பதை விட மேலானது. கிறிஸ்தவ வாழ்வு ஒரு நபரத்துவம்: அதாவது ஆண்டவராகிய இயேசுவோடுள்ள ஐக்கியத்தின் அனுபவம். கிறிஸ்துவோடு எவ்வளவாக உறவு அதிகமாகக் கொள்கிறோமோ அவ்வளவாக நமது கிறிஸ்தவ வாழ்வும் அமைகிறது.

கிறிஸ்தவ வாழ்வு கிறிஸ்துவைப் பின்பற்றும் வாழ்வு. மத்.16:24 படிக்க. நாம் கிறிஸ்துவைப் பின்பற்றுவதில் இன்னும் நெருங்க வேண்டும். "ஆட்டுக் குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்பற்றுகிறவர்கள் இவர்களே" *(வெளி.14:4)* ஆயினும் இன்னொரு வகுப்பினர் இருக்கிறார்கள், அவர்கள் பெருங்கூட்டத்தினர். அவர்கள் ஆண்டவரை விட்டு விட்டு, ஒழுங்கற்றும், அரை மனதோடும், எப்போதாவதும், தூரமாகவும் பின்பற்றுகிறவர்கள். அவர்கள் வாழ்வில் அதிக லௌகீகமும், சுயமும் காணப்படும். எனவே கிறிஸ்து அவர்களில் காணப்படுவதில்லை. காலேபைப் போல ஆண்டவரை முழுமையாகப் பின்பற்றுகிறவர்கள் மும்மடங்கு சந்தோஷமடைவார்கள்.

அன்பானவர்களே, நமது முக்கிய பணி கிறிஸ்துவைப் பின்பற்றுவதாகும். ஆனால் அப்பாதையில் கடினங்கள் உண்டு. அவர்களைக் குறித்துதான் முதற்பகுதியிலே படிக்கிறோம். பின் பற்றுதல்தான் முதன்மையானது. சுயம் குறுக்காக நிற்கிறது. உலகமும் அதன் திரளான கவர்ச்சிகளும் கவனச் சிதறல் களாயிருந்து தடையாயிருக்கின்றன. எனவே கிறிஸ்துவின் வார்த்தைகளின் படி, "ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், (முதன்மை) அவன் தன்னைத்தான் வெறுத்து (இரண்டாவது) தன் சிலுவையை எடுத்துக் கொண்டு (மூன்றாவது)பின்பற்றக்கடவன்". (இறுதி)

சுயத்தை வெறுக்க வேண்டும்

ஆண்டவராகிய இயேசுவைப் பின்பற்றுவதற்கான முதல் அடி சுயத்தை வெறுப்பது. சுயத்தை வெறுப்பதற்கும் பேருக்கான சுய வெறுப்பும் மிகவும் வித்தியாசமானவை. உலகத்திலும் கிறிஸ்தவர்களிலும் பிரபலமான கருத்து நான் விரும்புபவைகளை விட்டு விடுவது என்பதாகும். நாம் எதை விட வேண்டும் என்பதில் அதிகக் கருத்து வேறுபாடு காணப்படுகிறது. சிலர் லௌகீகம் எனக் கருதப்படும் படம் பார்த்தல், நடனங்கள், பந்தயங்கள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதைக் குறித்துக் கூறுகிறார்கள். சிலர் சில குறிப்பிட்ட காலங்களில் மட்டும் கேளிக்கைகளைத் தவிர்ப்பதை எடுத்துக் கூறுகிறார்கள்.

இவைகள் ஆவிக்குரிய பெருமையைக் காட்டுகின்றன. ஏதோ சிலவற்றை சில காலங்களில் கட்டுப்படுத்துவது நல்லது தான். ஆனால் இவை எதுவும் தன்னைத் தான் வெறுப்பது அல்ல.

அப்படியானால் அதன் பொருள் என்ன? முதலாவது தனது சொந்த நீதியை

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்க தொடர்ச்சி)

வெறுக்க வேண்டும். மேலும் எனது சொந்த ஞானத்தை சார்ந்திருப்பதை மறுக்க வேண்டும். எனது உரிமைகளை சார்ந்து நிற்பதை நான் விட்டு விட வேண்டும். சுயத்தை அப்படியே தள்ளி வைக்க வேண்டும். நமது சொந்த சொகுசுகள், இன்பங்கள், லாபங்கள், பேராவல்கள் அனைத்தையும் விட்டு விடுவதோடு அப்போஸ்தலனோடு ¼Äì Ím "ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால் தன்னைத் தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" என்ற ஆண்டவரது வாக்கைக் கடைப்பிடிக்க வேண்டும். ரோமர்:12:1ன்படி "உங்கள் சரீரங்களை பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டும்".

சிலுவையை எடுக்க வேண்டும்

இரண்டாவது அடி சிலுவையை எடுப்பதாகும். கிறிஸ்தவ வாழ்வு என்பது சொகுசானதல்ல, கடினமான துணிச்சலின் செயல். தியாகத்தோடு கட்டுப்பாடுடைய செயல். சீஷத்துவ வாழ்வு தன்னை வெறுப்பதில் ஆரம்பித்து சுயத்தை சாகடிப்பதில் தொடருகிறது. சிலுவை என்பது விசுவாசத்தின் ஒரு பொருளல்ல, வாழ்வின் தத்துவமாகும். சீஷத்துவத்திற்கு அடையாளமாகவும், ஆத்துமாவில் அனுபமாகவும் இருக்க வேண்டும். பிதாவிடம் கிட்டிச் சேர நசரேயனாகிய இயேசுவின் சிலுவை எப்படி வழியாக அமைகிறதோ, அது போலவே தேவனோடுள்ள உறவுக்கும் இறுதியில் கிரீடத்தைப் பெறுவதற்கும் வழி சிலுவையே. கிறிஸ்துவின் தியாக பலி நமக்கு பயன்பட விசுவாசம் தேவை. அதன் மூலம் பாவத்தின் குற்ற உணர்வு அகற்றப்பட்டு, சிலுவை உள்ளாக வாசம் பண்ணும். பாவத்திற்கு மேலே வெற்றி தந்து ஒவ்வொரு நாளும் அந்த வெற்றியை உணரச் செய்கிறது சிலுவை.

மத்.16:21-22 வசனங்களைப் படியுங்கள்.

இயேசு தமது பாடு மரணத்தைக் குறித்து சீஷர்களிடம் பேசிய போது பேதுரு அவரைக் கடிந்து கொண்டான். இது உலகத்தின் நிலை. இது உலக தத்துவம் - சுய பாதுகாப்பு - சுய தேடுதல். ஆனால் இயேசு பிரசங்கித்தது தியாகம். பேதுருவின் ஆலோசனையில் சாத்தானுடைய சோதனையை இயேசு கண்டார். எனவே அதை விட்டு விலகிக் கொண்டார். பின்பு சீஷர்களிடம் திரும்பி "ஒருவன் என்னைப் பின்பற்றி வர ... என்னைப் பின்பற்றக்கடவன்" என்றார். இன்னொருவிதமாகக் கூறினால் "நான் எருசலேமுக்கு போகிறேன், அங்கு எனக்கு சிலுவை வைக்கப்பட்டிருக்கிறது. என்னைப் பின்பற்றுகிறவர்களுக்கும் அங்கு ஒரு சிலுவை இருக்கிறது". லூக்.14:27-ல் "தன் சிலுவையை சுமந்து கொண்டு எனக்குப் பின்செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்" என்று இயேசு கூறியிருக்கிறார். இயேசுவைப் பின் பற்றுகிற அனைவருக்கும் சிலுவை உண்டு. சிலுவை தனியாக நின்றாலும், பரிசோதனையில் ஜீவனுக்குள் பிரவேசிக்கிற அனைவருக்கும் அதில் பங்குண்டு.

சிலுவையைப் பற்றி தவறான கண்ணோட்டம்

சிலுவை எதனைக் காண்பிக்கிறது? ஒருவன் தன் சிலுவையை சுமக்க வேண்டும் என்று இயேசு சொன்ன போது அவரது கருத்து என்ன? தேவ பிள்ளைகள் என்று சொல்லப்படுகிறவர்களில் அனேகர் தவறான கருத்தை உடையவர்களாயிருக்கின்றனர். சாதாரண கிறிஸ்தவன் சிலுவை இந்த வேதபகுதியில் சோதனை அல்லது துன்பத்தைக் குறிக்கிறது என்பார்கள். நமது சமாதானத்தைக் குலைக்கும் சம்பவங்கள், மாம்சத்தை துன்புறுத்துபவை, நமது கோபத்தை எழுப்பும் காரியங்கள் யாவும் சிலுவையாக எண்ணப்படுகின்றன. இவ்வாறு ஒவ்வொருவரும் ஒவ்வொன்றை தங்கள் சிலுவையாகக் கொள்கிறார்கள். ஆனால் இவையெல்லாம் சிலுவை என்று புதிய ஏற்பாடு குறிப்பிடவில்லை.

சிலுவை எப்போதுமே ஒருமையில் தான் குறிப்பிடப்படுகிறது. அதற்கு முன்பு நிச்சயம் அல்லது நிச்சய மற்ற பதமும் இல்லை. சிலுவை நம்மீது சுமத்தப்படுவதல்ல, நாமே எடுக்க வேண்டிய சிலுவை. அது நிச்சயமான உண்மைகளை அடக்கியிருப்பதுடன் கிறிஸ்துவின் வேதனை யின் தலைசிறந்த குணாதிசயங்களையும் வெளிப்படுத்துவதுமாகும்.

இன்னும் சிலர் சிலுவை தாங்கள் நிர்விசாரமாக நிறைவேற்றும் பொருத்தமில்லாத கடமைகள் அல்லது தாங்கள் முறுமுறுப்போடு மறுதலிக்கிற மாம்சீக பழக்கங்கள் என்கிறார்கள். அவர்களும் தாங்கள் சிலுவை சுமப்பதாகக் கூறி மனச்சாட்சியின் அடிப்படையில் மிகவும் விருப்பமான காரியங்களை விலக்கிக் கொள்கிறார்கள். இவர்கள் தங்கள் சிலுவையை பிற மக்களை தங்கள் ஆயுதமாகக் கருதுகின்றனர். அவர்கள் தங்கள் சுய வெறுப்பை விளம்பரப் படுத்தி மற்றவர்கள் அவர்களைப் பின்பற்றும்படி வற்புறுத்துகிறார்கள். இத்தகைய கணிப்புகள் பரிசேய தன்மையுடையதும் தவறானதும் அக்கிரமமானது. ஏனென்றால் இது மிகவும் தவறானது.

சிலுவையின் உண்மையான பொருள்

முதலாவது சிலுவை உலகத்தின் வெறுப்பை வெளிப்படுத்துகிறது. உலகம் கிறிஸ்துவை வெறுத்து, அந்த வெறுப்பை அவரைச் சிலுவையில் அறைந்ததின் மூலம் வெளிப்படுத்தியது. யோவான் 15-ம் அதிகாரத்தில் ஏழு முறை கிறிஸ்து உலகம் அவருக்கு எதிராகவும் அவரது ஜனங்களுக்கு எதிராகவும் வெறுப்பை காண்பிப்பதை எடுத்துக் காண்பிக்கிறார். எந்த அளவில் நாம் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறோமோ, எந்த அளவில் கிறிஸ்துவைப் போல் நாம் வாழ்கிறோமோ, எந்த அளவில் உலகை விட்டு நாம் வெளிவந்து அவரோடு உறவு கொள்கிறோமோ, அந்த அளவாக உலகம் நம்மை வெறுக்கும்.

ஒரு முறை ஒருவன் கிறிஸ்து விடம் வந்து அவரைப் பின்பற்ற தனது விருப்பத்தைக் கூறிவிட்டு, முதலாவது தனது தந்தையை அடக்கம் செய்து விட்டு வருவதாகக் கூறினான். அது ஒரு சாதாரண வேண்டுகோள். அது புகழப் பட வேண்டியது தான். ஆனால் ஆண்டவருடைய பதில் "மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம் பண்ணட்டும்; நீ என்னைப் பின்பற்றி வா" (மத்.8:22) கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிந்திருந்தால் அவனுக்கு என்ன சம்பவித்திருக்கும்? அவனது அயலகத்தாரும் உறவினரும் அவனைக் குறித்து என்ன நினைத்திருப்பார்கள்? தகப்பனுக்குச் செய்ய வேண்டிய கடமைக்குப் பதிலாக அவனது பக்தியையும் நோக்கத்தையும் புகழுவார்களா? நீங்கள் கிறிஸ்துவைப் பின்பற்றினால் உலகம் உங்களைப் பைத்தியம் என்று கூறும். ஒருவருடைய மரண இழப்பைவிட நிந்தனைகள் கடினமான சோதனை என்பவர்களும் உண்டு.

இன்னொருவனும் இயேசு விடம் வந்து அவரைப் பின்பற்ற விரும்புவதாகக் கூறிவிட்டு, முதலாவது வீட்டிற்குச் சென்று தன் உறவினருடனும், நண்பர்களுடனும் விடை பெற்று வருவதாகக் கூறினான். அது இயற்கை தான். ஆண்டவர் அவனுக்குச் சொன்ன பதில்: "கலப்பையின் மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப் பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல" (லூக்.9:62) குடும்பத் தொடர்பு முறிவது சகிக்க முடியாதது. நண்பர்களையும் உறவினர்களையும் தகுந்த கனப்படுத்தாமலிருப்பது இன்னும் கடினமானது. கிறிஸ்துவை நாம் நெருக்கமாகப் பின்பற்றினால் உலகம் நம்மை நிந்திக்கும். உலகத்தோடு நெருங்கிய தொடர்பு கிறிஸ்துவைப் பின்தொடர வழிவகுப்பதில்லை.

இன்னொரு வாலிபன் அவருடைய பாதத்தில் விழுந்து அவரை வணங்கி, "நல்ல போதகரே, நித்திய ஜீவனை அடைவதற்கு நான் எந்த நன்மையைச் செய்ய வேண்டும்?" என்று கேட்டான். (மத்.19:16) "....நீ போய் உனக்கு உண்டானவைகளை விற்று தரித்திரருக்குக் கொடு ....பின்பு என்னைப் பின்பற்றி வா" (மத்.19:21) என்பது ஆண்டவரது பதில். அவனோ துக்கமடைந்தவனாகப் போய் விட்டான். சிலுவையை எடுத்துக் கொண்டு அவருக்குப் பின் செல்லாதவன் அவருக்கு சீஷனல்ல. சிலுவை உலக நிந்தையையும் வெறுப்பையும் உள்ளடக்கியது. ஆனால் இயேசு தாமாக முன்வந்து சிலுவையை ஏற்றது போல அவரது சீஷர்களும் தாமாக முன்வந்து சிலுவையை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

தன்னார்வ கீழ்ப்படிதல்

இரண்டாவதாக சிலுவை நாமாகவே தேவ சித்தத்திற்கு அர்ப்

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்க தொடர்ச்சி)

பணிக்க அழைக்கிறது. உலகப் பார்வையில் இயேசுவின் மரணம் தானாக முன்வந்த ஒரு தியாகம். யோவா.10:17-18 வசனங்களைப் படிப்போம். "நான் என் ஜீவனை மறுபடியும் அடையும்படிக்கு அதைக் கொடுக்கிறபடியினால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார். ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக் கொள்ள மாட்டான். நானே அதைக் கொடுக்கிறேன், அதை கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக் கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு". அவர் ஏன் தமது ஜீவனைக் கொடுத்தார்? 18ம் வசனத்தின் கடைசியில், "இந்தக் கட்டளையை என் பிதாவினிடத்தில் பெற்றேன்" என்று படிக்கிறோம். தேவன் தமது குமாரனிடத்தில் கேட்ட கீழ்ப்படிதலின் வேண்டுகோள். எனவே, "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்கு சமமாயிருப்பதை கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத் தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து மனுஷர் சாயலானார். அவர் மனுஷ ரூபமாய்க் காணப்பட்டு, மரண பரியந்தம், அதாவது சிலுவையின் மரண பரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத் தாமே தாழ்த்தினார்". இதுவே கீழ்படிதலின் உச்சநிலை.

அவரைப் பின்பற்ற கிறிஸ்து ஒரு மாதிரியை விட்டுச் சென்றுள்ளார். கிறிஸ்துவின் கீழ்ப்படிதல் கிறிஸ்தவனில் காணப்பட வேண்டும். பலவந்தமாக அல்ல தன்னார்வத்துடன் கீழ்ப்படிய வேண்டும். அது தொடர்பாகவும் உத்தமத்துடனும் கடைசி மட்டும் காணப்பட வேண்டும். எனவே சிலுவை கீழ்ப்படிதல், அர்ப்பணம், ஒப்படைப்பு, தேவனது சித்தத்தின்படி நடத்தல் ஆகியவற்றை அடக்கியது. சிலுவை சீஷத்துவத்தின் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது. கிறிஸ்து தம்மை பிரியப்படுத்த வரவில்லை. நாமும் அப்படியிருக்க வேண்டும். அவர் புகழை விரும்பவில்லை. நாமும் அப்படி இருப்பது நலம். அவர் நன்மை செய்கிறவராக சுற்றி நடந்தது போல நாமும் நன்மை செய்வோம். அவர் ஊழியம் கொள்ளும்படி வராமல் ஊழியம் செய்யவும் அனேகரை மீட்கும் படியாக தமது ஜீவனைக் கொடுக்கவும் வந்தார். நாம் அதன்படி செய்வோம். மரண பரியந்தம் கீழ்ப்படிந்தார். நாமும் அப்படிச் செய்வோம்.

பிறருக்காக தியாகம்

மூன்றாவதாக சிலுவை கொடுமையான தியாகத்தையும் பாடுகளையும் குறிக்கிறது. அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம். நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம். (1 யோவா.3:16) நாம் கிறிஸ்துவோடுள்ள உறவினாலே, அவரது தத்துவத்தின்படி தேவனுக்குக் கீழ்ப்படிந்து பிறருக்காக தியாகத்துடன் வாழுவோம். நாம் வாழ அவர் மரித்தார். நாம் வாழ நாம் மரிக்க வேண்டும். மத்.25:16ன்படி தன் ஜீவனை இரட்சிக்கிறவன் அதை இழந்து போவான். சுய நோக்குடன் தன் சொகுசு, சமாதானம், முன்னேற்றம், இலாபம், நன்மை போன்றவற்றிற்காக வாழுகிற வாழ்வு நித்தியமாக இழந்து போகக் கூடியது. ஆனால் ஆண்டவருக்காக இழக்கிறவன் அதை அடைந்து கொள்வான். அதாவது தன் சொந்த நலன், லாபம், முன்னேற்றம் இவைகளுக்காக வாழாமல் கிறிஸ்துவுக்காகப் பிறருடைய சேவையில் வாழ்வை செலவு பண்ணினவர்கள் ஜீவனைப் பெறுவார்கள். அது நித்தியமான வாழ்வு, நீண்டது, அழிவற்றது. இதிலடங்கியவை யாவும் அழியாதவை. வரப்போகிற நாளில் அக்கினியின் பரிசோதனையில் நிலை நிற்பவை. ஆண்டவருக்காக ஜீவனை இழந்து போகிறவன் அதைப் பெற்றுக் கொள்வான்.

மேலும் கிறிஸ்து தமது சீஷரைப் பார்த்து, "..... பிதா என்னை அனுப்பினது போல நானும் உங்களை அனுப்புகிறேன்" என்றார். (யோவா.20:21) பிதாவை மகிமைப்படுத்தும்படி கிறிஸ்து அனுப்பப்பட்டார். தேவ அன்பை வெளிப்படுத்தவும், அவரது கிருபையை விளங்கப் பண்ணவும், எருசலேமுக்காக கண்ணீர் விடவும், அறிவீனருக்காகவும், வழி தவறினவர்களுக்காகவும் மன வருக்கம் கொள்ளவும் கடினமாக உழைக்கவும் இயேசு வந்தார். உணவு உண்ண அவருக்கு நேரம் கிடைக்க வில்லை. அவரது தியாகத்தைக் கண்டு அவரது உறவினர் அவர் மதி மயங்கியிருப்பதாகக் குறை கூறினர் மாற்.3:21. எந்த உலகத்திலிருந்து அவர் நம்மை இரட்சித்தாரோ அந்த உலகத்திற்கே நம்மைத் திரும்ப அனுப்புகிறார். சிலுவையின் முத்திரையை நம்மீது பதித்து விட்டார். கிறிஸ்துவின் மரணம் நமது சரீரத்தில் சுமக்கப்படுகிறதா? (2 கொரி.4:10)

சிலுவை பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும்

நாம் சிலுவையை எடுக்க ஆரம்பித்து விட்டோமா? நாம் யாரேனும் அதிக தூரத்தில் அவரைப் பின் செல்கிறோமா? நம்மில் வாசம் செய்து கொண்டிருக்கும் பாவத்தின் மேல் வெற்றி உண்டா? நடுநிலையில் சிலுவை தனியாயிருக்கிறது. பரிசோதனைப்படி அது எல்லாராலும் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும். சட்டப்படி கிறிஸ்துவின் சிலுவை நமது பாவங்களை அகற்றியது. சிலுவை பாவத்தின் வல்லமையிலிருந்து விடுதலை பெறவும், பழைய மனிதனை மேற்கொள்ளவும் சிலுவை நமது ஆத்துமாக்களின் அனுபவத்தின் பகுதியாக மாற வேண்டும். சிலுவையில்தான் சட்டப்படியும் நீதியின்படியும் பாவம் பரிகரிக்கப்பட்டது. சிலுவையை எடுக்கும் போது தான் பாவத்தின் வல்லமை அழிக்கப்படும் அனுபவத்தை அடையலாம். "தன் சிலுவையை எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்கு சீஷனாயிருக்க மாட்டான்". கிறிஸ்தவனே, நமது பரம எஜமானாகிய இயேசுவுடன் உறவு கொண்டு, அவரது சேவைக்காக உன்னைத் தத்தம் செய்வாயாக.

உமது இருதயத்துக்கு ஏற்ற ஒரு மனிதனாக என்னை ஆக்கும்

Make me a man after thine own heart.

Oswald J. Smith

நவம்பர் மாதம் 8ம் நாள் 1927-ம் ஆண்டு எனது 38வது பிறந்த நாளில் இவ்வாறு நான் ஜெபித்தேன்: "ஆண்டவரே, என்னை உமது இருதயத்துக்கு ஏற்ற ஒரு மனிதனாக ஆக்கும்". எனது பணி பார்வையிலிருந்து மறைந்து போனது. முன்பு மிக முக்கியமாகத் தோன்றியவை முக்கியமற்றுப் போயின. நான் விருப்பத்தோடு செய்தவை இரண்டாம் இடத்திற்குச் சென்றன. தேவனுக்கு முன்பாக எனது சொந்த உள்ளான வாழ்வுதான் முக்கியமான தாகவும், தகுதியானதாகவும் தோன்றின. நான் எனது அறையில் முன்னும் பின்னுமாக நடந்து கொண்டே ஆவியில் ஜெபித்துக் கொண்டிருந்தேன். "ஆண்டவரே என்னை உமது இருதயத்துக்கு ஏற்றவனாக மாற்றும்".

நான் இதற்கு முன்பு கண்டிராத படி நான் செய்த பெரிய காரியங்கள், எழுதிக் கொண்டிருந்த புத்தகங்கள், பிரசங்கித்த பிரசங்கங்கள், திரள் கூட்டமாய் வசனத்தைக் கேட்ட மக்கள் பெற்ற வெற்றிகள் யாவும் என்னால் செய்யப்படவில்லை என்று அறிந்து கொண்டேன். ஆனால் நான் வாழ்ந்த வாழ்வும், எனது சிந்தனைகளும், தூய இருதயமும், நீதியான நடக்கையும் தூய ஆவியான வரால் தந்த கிறிஸ்துவின் சாயலான மறுரூபம் என கண்டு கொண்டேன்.

'தேவனோடு நெருங்கி நடக்க வேண்டும்' என்பது எனக்கு ஒரு புதிய கருத்தைத் தந்தது. இத்தகைய ஒரு அனுபவத்தை என் உள்ளம் வாஞ்சித்தது. 'நான் அவரை அறிவதற்காக' பிலி.3:10. மிகப் பெரிய அப்போஸ்தலனான பவுல் 'கிறிஸ்து உங்களில்' என்று ஜெபித்தார். கிறிஸ்து என்னில் வாழுகிறார் என்று கலா.2:20-ல் குறிப்பிடுகிறார். ஆம் நோவா தேவனோடு நடந்தார் (ஆதி.6:9; 5:24) நான் நடக்க முடியாதா? எனது பணியை விட நான் தேவனுக்கு விலையேறப் பெற்றவன். தேவன் எனது சேவையை மட்டும் விரும்பவில்லை.

எந்தன் ஜீவன் இயேசுவே சொந்தமாக ஆளுமே
எந்தன் காலம் நேரமும் நீர் கையாடியருளும்.

பின்பு அவர் என்னை ஜெபிக்கச் செய்தார். "ஆண்டவரே இதோ என் கரங்கள், அவற்றை உமக்கு அர்ப்பணிக்கிறேன். நீர் விரும்பாத எதையும் அவைகள் தொடாதிருக்கட்டும். உம்மை கனவீனப்படுத்தும் எதையும் செய்யாதிருக்கட்டும். இதோ எனது பாதங்கள், அவற்றையும் உமக்கு அர்ப்பணிக்

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்க தொடர்ச்சி)

கின்றேன். நீர் இல்லாத இடங்களுக்கு அவை செல்லாதிருக்கட்டும். எனது கண்களையும் உமக்கு ஒப்படைக்கிறேன். அவை தூய ஆவியானவரை துக்கப்படுத்தும் எதையும் பார்க்காமலிருக்கட்டும். உமது நாமத்திற்கு மகிமைக் குறைச்சலை உண்டு பண்ணும் வார்த்தைகளை என் காதுகள் கேட்காதிருப்பதாக. நீர் கேட்க விரும்பாத எதையும் என் வாய் பேசாதிருப்பதாக. உமது பிரசன்னத்தை மறைக்கும் எந்த எண்ணமும் மனோபாவனையும் எனது உள்ளத்தில் எழாதிருப்பதாக. எனது இருதயம் உமக்கு விருப்பமில்லாத எந்த அன்பையும் உணர்வையும் அறியாதிருப்பதாக. ஆமென்".

ஆண்டவரே, எனக்குள்ள அனைத்தையும்
உமக்கு அளிக்கிறேன்.
நண்பர்கள், காலம், பூலோக பொக்கிஷம்
ஆத்துமா, சரீரம், எல்லாம் உமக்கே,
முற்றிலும் உமக்கே என்றென்றும் உமக்கே.

நான் ஜெபித்த போது இந்த வசனம் எனக்கு வெளிப்பட்டது. "அப்படியிருக்க சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களை பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்துக்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும், பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்". *(ரோமர்.12:1,2)*

"ஆகையால், நீங்கள் சரீர இச்சைகளின்படி, பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக..... பாவம் உங்களை மேற்கொள்ள மாட்டாது" ரோமர்.6:12-14.

தேவனுக்கு முதலிடம் கொடுப்பது

பிளவுபடாத எனது கவனத்தை தேவன் என்னிடம் கேட்டார். வேறு எல்லாம் இரண்டாம் இடத்திலிருக்க வேண்டும். நண்பர்கள், அன்பானவர்கள், வீடு, பணம், வேலை எல்லாம் கிறிஸ்துவுக்கு வழி விட வேண்டும். இரவும் பகலும் சிதறலில்லாத எனது கவனம் அவருக்குக் கொடுக்கப்பட வேண்டும். தேவனுக்கே முதலிடம். இப்படியே என் மனநிலை இருக்க வேண்டும். அப்போதுதான் அவர் என்னை ஆசீர்வதிக்கவும் பயன்படுத்தவும் முடியும். அவரது அன்பின் இருதயத்தை இவ்விதமாக மட்டுமே திருப்திப்படுத்த முடியும்.

தேவனோடுள்ள தொடர்பில் எனக்கும் தேவனுக்குமிடையில் எதுவும் வரக்கூடாது. ஒரு மனைவிக்கு கணவன் முதலிடம் பெறுவது போலவும் கணவனுக்கு மனைவி முதலிடம் பெறுவது போலவும் தேவன் என் இருதயத்தில் முதலிடம் பெற வேண்டும். ஒரு சந்தோஷமான திருமண வாழ்வில் கணவனும் மனைவியும் தங்கள் கவனத்தை முழுமையாக ஒருவருக் கொருவர் அளிப்பது போல எனது முழுகவனமும் தேவன் மேலிருப்பதால் மட்டுமே அவரோடுள்ள உறவு முழுமை பெற முடியும்.

எல்லாம் இயேசுவுக்காக, எல்லாம்
இயேசுவுக்காக
எனது மீட்கப்பட்ட வலிமைகள்
எல்லா நினைவுகள், வார்த்தைகள் மற்றும்
செயல்கள்
எல்லா நாட்களும் மணி நேரங்களும்
அவருக்கே!

அவரது உரிமையை நாம் மறுக்க முடியுமா? அவர் கேட்பதில் இந்த அளவு கவனத்திற்குரிய ஏதேனும் உண்டா? பின்பு ஏன் அவர் கேட்பதைக் கொடுக்காமலிருக்கிறோம்? தேவனுக்கு வெளியே உண்மையான சந்தோஷம் காணப்படுகிறதா? 'பொருட்களால்' நாம் சந்தோஷமடைய முடியுமா? அவை நம்மை திருப்திப்படுத்துமா? "ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல" *(லூக்.12:15)*

தேவன் தமக்காகவே நம்மை உண்டு பண்ணினார்

தேவன் நமது உறவையும் ஐக்கியத்தையும் வாஞ்சிக்கிறார். வினாடிக்கு வினாடி இப்பொல்லாத உலகில் அவரோடு நாம் நடக்க வேண்டும். இத்தலைமுறை பொல்லாததும் மாறுபாடானதுமாயிருக்கிறது. இங்கு பிரித்தெடுக்கப்பட்டு ஆவியால் நிரப்பப்பட்ட வாழ்வு பயனற்றதாகக் கருதப்படுகிறது. இவ்வுலகின் தேவன் சாத்தான். சிலுவையில் இயேசுவை அறைந்த உலகில் நாம் அன்னியரும் பிரயாணிகளுமாயிருக்கிறோம்.

தேவன் நம்மை முற்றிலும் அவருக்காகக் கொடுக்க எதிர்பார்க்கிறார். நாம் முற்றிலும் அவருக்காக வாழ்கிறோமா? நாம் முற்றிலும் தேவனுக்கு சொந்தமா? 90 சதமானமல்ல நூறு சதமானம் அவருக்காக அர்ப்பணிக்க வேண்டும்.

ஆக தேவனுடைய இருதயத்திற் கேற்ற ஒருவராயிருக்க தேவனுக்கு முதலிடம் கொடுப்போம். ஒவ்வொரு நிமிடமும் அவரோடு நடப்போம். அவருக்குப் பிரியமில்லாத எதையும் செய்யாதிருப்போம். அவரைத் துக்கப்படுத்தும் எதற்கும் நம்மை விலக்குவோம். நீதியும் பரிசுத்தமுமான வாழ்வு வாழ்வோம். நமது முழு கவனத்தையும் அவருக்கே செலுத்தி அவரை மிக உயர்வாக நேசிப்போம்.

இதுவே கிறிஸ்துவைப் போல் வாழ்வதற்கான வழி. மேலும் இதுவே தேவனுடைய மிக உன்னதமான ஆவல். அதாவது நாம் அவரது குமாரனைப் போல அவரது சாயலில் மறுரூபமடைய வேண்டும். அதிகமான சமயத்தை அவரது சமுகத்தில் செலவிடுகிறவர்கள் மட்டுமே அவரைப் போலாக முடியும். அவருக்கு முழுகவனத்தையும் செலுத்துகிறவர்கள் மட்டுமே அவரை அறிந்து கொள்ள முடியும்.

அவரிடமிருந்து நலமானவைகளைப் பெற நம்மிடமுள்ள நலமான வைகளைக் கொடுக்க வேண்டும். அவரது இருதயத்திற்கு ஏற்றவர்களாக மாற நமது கவனம் முழுவதும் அவர் மேலிருக்க வேண்டும். வெற்றி பெற நாம் சரணடைய வேண்டும். நாம் வாழ மரிக்க வேண்டும். பெற்றுக் கொள்ள கொடுக்க வேண்டும்.

இத்தகைய வாழ்வு இனிமையானது. அவரது உறவு மகிழ்ச்சியானது. உலகிலுள்ள வெற்றிகளனைத்தும் இதற்கு இணையாவதில்லை. அவர் பள்ளத்தாக்கின் லீலி, பிரகாசமான விடிவெள்ளி, சரோனின் ரோஜா, பதினாயிரங்களில் சிறந்தவர், பூரண அழகுள்ளவர். நண்பர்களும் அருமையானவர்களும் ஏமாற்றலாம். பணம் பாரத்தையும் புகழ் கசப்பையும் கொண்டு வரலாம். தேவன் ஏமாற்றாதவர். அவரோடு நடப்பது இனிமையானது. அவரது முகத்தை நமது பாவம் மறைக்க வேண்டாம்.

தேற்றரவாளனாகிய தூய ஆவியானவர்

The Holy Spirit the comforter

Roy Hession (1908 - 1992)

தூய ஆவியானவர் கிறிஸ்துவின் மூலம் நமக்குப் பாவ மன்னிப்பை அருளுவது மட்டுமன்றி, நமது பல்வேறு தேவைகளையும் சந்திக்கக் கூடியவர். "அவர் என்னுடையதில் எடுத்து, உங்களுக்கு அறிவிப்பார்" யோவா.16:14. நமது செயல்பாடுகளுக்கான அதிகாரத்தை நாம் நமது தோள்களில் எடுத்துக் கொண்டால் அதற்குரிய வல்லமை வேண்டுமே என்ற கரிசனை நமக்கு ஏற்படும். ஆனால் அதிகாரத்தையும் ஆளுமையையும் தேவனுடைய தோள்களில் வைத்து விட்டோமானால் அதற்குரிய வல்லமை அவரிடமே இருக்கிறது. அதை நமக்குத் தெளிவுபடுத்த ஆவியானவர் விரும்புகிறார். அவர் தம்மை நம்முடைய இருதயங்களில் வெளிப்படுத்துகிறவர். அவர் ஏற்கனவே தமது சிலுவை மரணத்தால் பிசாசை மேற்கொண்டுவிட்டார். எபேசி.1:20,21 வசனங்களின்படி "எல்லா நாமத்துக்கும் மேலாய் உயர்ந்திருக்கத்தக்கதாக, எல்லாத் துரைத்தனங்களுக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும் மேலாக உன்னதங்களில் தம்முடைய வலதுபாரிசத்தில் உட்காரும்படி செய்தார்". எல்லா எதிர் சத்துவங்களுக்கும் அவர் மேலானவர். நாமும் அவரைப் போலாக வேண்டும். நாம் ஏற்கனவே வெற்றி பெற்று விட்டவர்கள். நமக்காக அவர் யுத்தம் பண்ணி விட்டார்.

நமது பிரச்சனைகளிலெல்லாம் இயேசு நம்மோடிருக்கிறார் என்பதை உணராமல் கவலைப்பட்டுக் கலங்குகிறோம். ஆனால் நமது தேவைகளிலெல்லாம் அவர் நமக்குப் போதுமான ஆதாரமாயிருக்கிறார். நாம் விடுதலை பெற்றவர்கள், அவருக்குள் வாழுகிறோம்.

தூய ஆவியானவரின் ஒரு எழுப்புதல் தேவை

The need for a Holy Spirit Revival

L.L. Legters

இன்றைய தேவை மனித செயலாலும் திட்டத்தாலும் ஏற்படும் எழுப்புதலல்ல, இவ்வுலகில் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் தூய ஆவியான வரால் ஏற்படும் எழுப்புதல் ஒன்றே தேவை. எழுப்புதலால் பெந்தெகொஸ்தே நாள் போன்ற விளைவுகள் ஏற்பட வேண்டும். ஆண்களும் பெண்களும் தூய ஆவியால் நிரப்பப்பட்டு மும்மடங் கான ஆசீர்வாதங்களைப் பெற வேண்டும். அது ஒரு சிலருக்கு மட்டுமல்ல, பூமியிலுள்ள கிறிஸ்துவின் சரீரமாகிய சபை முழுவதிலும் ஏற்பட வேண்டும்.

பெந்தெகொஸ்தே நாளிலே ஒவ்வொருவரும் உத்தம ஆசீர்வாதத்தால் நிரப்பப்பட்டது ஜீவனுள்ள ஆண்ட வராகிய இயேசுக் கிறிஸ்துவினை பெற்றுக் கொண்ட புதிய உணர்வா யிருந்தது. அவர்கள் வாழ்ந்ததும், பணி செய்ததும், நடந்ததும் ஜீவனுள்ள கர்த்தரின் வல்லமையாலும் பிரசன்னத் தாலுமே. வேதவசனத்தைக் குறித்து ஒவ்வொருவரும் புதிய புரிந்து கொள்ளு தலைப் பெற்றுக் கொண்டனர். மேலும் தங்களுக்குள்ளேயும் உலகத்தோடும் மிகுந்த வாஞ்சையோடு வேத வசனம் மற்றும் இரட்சகரைக் குறித்த புதிய அறிவைப் பகிர்ந்து கொண்டனர்.

இறுதியாக ஒருவருக்கொருவர் புதிய புரிந்து கொள்ளுதலையும் ரசனை யையும்பெற்றனர். ஒவ்வொருவரும் பிறரோடு சார்ந்து இருப்பதால் ஒருவரது லாபமும் நஷ்டமும் மற்றவர்களை பாதிப்புக்குள்ளாக்கியதைக் கண்டு கொண்டனர். ஆண்டவராகிய இயேசு வுக்குள் அவர்கள் ஒன்றாயிருந்தனர். இவையெல்லாம் பெந்தேகோஸ்தே நாளில் நிலையான அனுபவங்கள். அவை ஆரம்பத்தில் இருந்தது போல இன்றும் தேவையாயிருக்கின்றன. இந்த விளை வுகள் தூய ஆவியால் நிரப்பப் பட்ட ஒரு வாழ்வில் எப்போதும் காணப்படு கின்றன.

எபேசி.3 16-17 வசனங் களின்படி கிறிஸ்துவானவர் உங்கள் உள்ளங்களில் விசுவாசத்தின் மூலம் உங்கள் உள்ளான மனிதனின் அவரது ஆவியால் வல்லமைப் படுத்தப்பட வேண்டும். ஆக அங்கொரு வர் இங்கொருவராக அல்ல கிறிஸ்துவின் சபையாகிய சரீரத்தின் ஒவ்வொரு அங்கமும் ஆவியால் நிரப்பப்படுவது அவசியம்.

பெரும்பாலான கிறிஸ்தவர் களும் சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்துவை நோக்கிப் பார்ப்பதே யல்லாமல் வாழ்ந்து கொண்டும், ஆட்சி செய்து கொண்டுமிருக்கும் அவரை நோக்கிப் பார்ப்பதில்லை. பெந்தெ கொஸ்தே நாளிலும் அதற்குப் பிறகும் சீடர்கள் சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கித்தாலும் அதோடு இன்றும் வாழ்ந்து கொண்டிருப்பவரும், உயிரோடெழுந்தவரும், உயர்த்தப் பட்டவரும், அதிசயங்களைச் செய்கிற வரும், நாளை வரப் போகும் அரசனும், உலகமெல்லாவற்றையும் நியாயந்தீர்க்கப் போகிறவருமாயிருக்கிறார். எனவே கிறிஸ்தவர்கள் ஜீவித்திருக்கும் கிறிஸ் துவை அறிந்து கொள்ளவும், பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத் தீர்ப்பைக் குறித்தும் கண்டித்து உணர்த் தப்படவும் பரிசுத்த ஆவியானவரின் எழுப்புதல் தேவை யோவா.*16:8.*

நமது தலைவர்கள் ஒரு மரத்துப் போன சபையின் பணிக்காகத் திட்ட மிடுகிறார்கள். அவர்கள் தூய ஆவி யானவர் மட்டுமே செய்யக் கூடியதை சட்ட திட்டங்களைக் கொண்டு நிறை வேற்றப் பிரயாசப்படுகிறார்கள். "...வல்லமை தேவனுக்கே உரியது" *சங்.62:1.* அப்.*1:8*ன்படி "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும் போது, நீங்கள் பெலனடைவீர்கள்". சபை இன்று வல்லமையற்றிருக்கிறது. நமக்கு தூய ஆவியானவரின் ஒரு எழுப்புதல் தேவை.

இன்று நமக்கு தேவனுடைய சித்தம் இத்தகைய ஒரு எழுப்புதல் ஒன்றே. இது தேவ கட்டளை. 'ஆவி யினால் நிறைந்து' *எபேசி.5:18.* கிறிஸ்து வின் சரீரத்தின் ஒவ்வொரு அங்கமும் ஆவியால் நிரப்பப்பட்டு, முதல் நூற்றாண்டின் வாழ்வு மலர்ந்து, மக்கள் அனுதினமும் மனந்திரும்ப வேண்டும். பாவிகள், 'நாங்கள் என்ன செய்ய வேண்டும்?' என்று கதற வேண்டும்.

ஆண்டவராகிய இயேசு இதற் காகவே சிலுவையில் மரித்து, விசுவாசிக் கிறவர்கள் தேவனுடைய நிறைவால் நிரப்பப்படும்படி வாசலைத் திறந்தார் *எபேசி.3:19.*

நாம் ஆவியில் நடக்கவும், ஜெபிக் கவும், ஆராதிக்கவும் நன்றி செலுத்தவும், ஆவியின் ஒருமைப்பாட்டினைக் காக்கவும் அழைக்கப் படுகிறோம்.

தேவை அதிகம், அவசரம், கட்டாயம்! தேவ சித்தம் தெளிவாகவும், நன்கு அறியப்பட்டதாகவுமிருக்கிறது. நாம் அனைவரும் ஞானத்தோடும் விசுவாசத்தோடும் ஜெபிக்க வேண்டும். அவருடைய சித்தத்தின்படி நாம் கேட்டால் அவர் நமது ஜெபத்தைக் கேட்பது நிச்சயம். *(1 யோவா.5:14)*

ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்!

எழுப்புதலுக்காக இதய கதறல்

(7 மணி நேர உபவாச ஜெபம்)

இடம் : **A.G. Church**
30, Parnativilai, Colachel. Mobile : 94428 56683

நாள் : **08.04.2023,** 2-வது சனிக்கிழமை

நேரம் : காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை

தலைமை : **Pr. S. Christopher** (A.G. Church, Colachel)

செய்தி : சகோதரன் **வெஸ்லி தேவதாசன்**

ஜெபம் : **NIMS மிஷனெரிகள்,** குஜராத்
IEM மிஷனெரிகள், தமிழ்நாடு

தொடர்பு : **வருகையின் தூதன்,** மொபைல் : 95432 21008

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு

தேவன் மனிதனாக அவதரித்தது மக்களை சந்திக்க மட்டுமல்ல, மனித குலத்தை மீட்பதற்காகவும் என்பது மறுக்க முடியாத சத்தியம்.

சிலுவையைக் குறித்துக் கேள்விப்பட்ட எவருமே அசைக்கப்படாமலிருக்க முடியாது.

இரக்கமும் உருக்கமுமான பிரதான ஆசாரியரது தன்மையை நாம் உணரும் போது பாடுகளின் வேளைகளில் பரலோக இனிமையை நாம் அனுபவிக்கிறோம்.

சபை என்பது சிலுவையிலறையப்பட்ட மக்களின் கூட்டம். நாம் எப்படி கிறிஸ்து வோடு சிலுவையிலறையப்பட்டோம் என்று புரிந்து கொள்ளாவிட்டால் கிறிஸ்தவ வாழ்வுக்குரிய திறவுகோலை தவற விட்டு விட்டோம்.

நமது விசுவாசம் சிலுவையில் அஸ்திபாரம் கொள்வது மட்டுமல்ல, நமது செய்தியும் சிலுவையாகவே இருக்க வேண்டும் என்பதை சபை புரிந்து கொள்ள வேண்டும். தேவன் தாமே அதற்கு உதவி செய்வாராக. இழந்து போனதும், மரித்துக் கொண்டிருப் பதுமான சபைக்கு இதுவே செய்தி.

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason